09.02.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 90 சதவீத நிலங்களில் தழைச் சத்து பற்றாக்குறைஇயற்கை பசுந்தாள் உரம் வலியுறுத்தப்படுமா?

திண்டுக்கல் மாவட்டத்தில் 90 சதவீத நிலங்களில் தழைச் சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், ரசாயன உரங்களுக்கு மாற்றாக இயற்கை பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நிறம், கார அமிலத் தன்மை அடிப்படையில், தமிழகத்தில் 13 வகையான மண் அமைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில், இருகூர், பாலவிடுதி, சோமயனூர், பாலத்துறை, திண்டுக்கல் என 5 வகையான மண் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தின் மொத்த பரப்பில், மிதமான அமிலத்தன்மை கொண்ட இருகூர் மண் வகை 34.01 சதவீதத்துடன் முதலிடம் வகிக்கிறது. கார அமிலம் நடுநிலையாகக் கொண்ட பாலவிடுதி மண் வகை 11 சதவீதமும், மிதமான களர் தன்மை கொண்ட சோமயனூர் மற்றும் பாலத்துறை மண் வகை தலா 3 சதவீதமும் உள்ளன. உப்புத் தன்மை கொண்ட திண்டுக்கல் மண் வகை 1.54 சதவீதம் உள்ளது. மத்திய-மாநில அரசு பங்களிப்புடன், திண்டுக்கல் மாவட்டத்தில் மண் வள அட்டை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மானாவாரியில் 10 ஹெக்டேருக்கு 1 மாதிரி, இறவையில் 2.5 ஹெக்டேருக்கு 1 மாதிரி வீதம் மண் பரிசோதனை நடைபெற்று வருகிறது. முதல்கட்டமாக, 14 ஒன்றியங்களிலும் 10,240 மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வுகள் நடத்தப்பட்டன.

தழை, மணி, சாம்பல் (பேரூரட்டச் சத்துகள்), கால்சியம், மெக்னீசியம், சல்பர்(2ஆம் நிலை சத்துகள்), இரும்பு, துத்தநாகம், மாங்கனீஸ், தாமிரம்,

போரான், கார்பன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் (நுண்ணூட்டச் சத்துகள்) ஆகிய 16 வகையான சத்துகள் பயிர் வளர்ச்சிக்குத் தேவை.

பேரூட்டச் சத்துகள், 2ஆம் நிலை சத்துகள் குறித்து 10,240 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பயிர் வளர்ச்சிக்கு முக்கியத் தேவையான தழைச் சத்துகள் 90 சதவீத நிலங்களில் பற்றாக்குறையாக உள்ளது தெரிய வந்துள்ளது. பயிர் சீரான வளர்ச்சி பெறுவதற்கு, ஒரு ஏக்கரில் 112 முதல் 180 கிலோ தழைச் சத்து இருக்க வேண்டும். ஆனால், ஆய்வு முடிவுகளின்படி 40 முதல் 95 கிலோ மட்டுமே இருப்பது தெரிய வந்துள்ளது.

இதேபோல், ஒரு ஏக்கரில் 4.5 கிலோ இருக்க வேண்டிய மணிச்சத்து 50 சதவீதமும், 48 கிலோ இருக்க வேண்டிய சாம்பல் சத்து 20 சதவீதமும் பற்றாக்குறையாக உள்ளது. மேலும், துத்தநாகம் 37 சதவீதமும், காப்பர் 21 சதவீதமும் பற்றாக்குறையாக உள்ளது.

கொடைக்கானல் மலைப் பகுதி மற்றும் நெல் சாகுபடி செய்யப்படும் பழனி நீங்கலாக, மாவட்டத்தின் பிற பகுதி நிலங்களில் தழைச்சத்து பற்றாக்குறை அதிகரித்துள்ளது. ரசாயன உரங்களைத் தொடர்ந்து பயன்படுத்தினால், இந்தப் பற்றாக்குறை மேலும் அதிகரித்து மண் வளம் கடுமையாகப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, மூத்த வேளாண்மை அலுவலர் சி. ராஜேஸ்வரி தெரிவித்தது: ரசாயன உரம் பயன்படுத்துவதால், பயிர் வளர்ச்சிக்கு ஊக்கம் தரக்கூடிய நுண்ணுயிர்கள் அழிந்து விடுகின்றன. எனவே, ரசாயன உரம் பயன்படுத்துவதை சீராகக் குறைப்பதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும்.

தழைச் சத்துப் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் வகையில், வேர் முடிச்சு நிறைந்த பயறு வகைகளையும், கொழுஞ்சி, தக்கைப் பூண்டு, சணப்பூ போன்ற தழைச் சத்துமிக்க பயிர்களையும் சாகுபடி செய்து, நிலத்தில் மடக்கி உழவு செய்யவேண்டும். மேலும், பயிர் சுழற்சி முறையையும் விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்றார்.

**வேலூர் ஆலையில் கரும்பு அரைவைப் பணி தொடக்கம்**

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2015-2016ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவைப் பணி திங்கள்கிழமை தொடங்கியது.

திருவலத்தை அடுத்த அம்முண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின்கீழ் காட்பாடி, வாலாஜாபேட்டை, ஆற்காடு, அரக்கோணம் ஆகிய 4 வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயிரிட்டுள்ள சுமார் ஒரு லட்சம் டன் கரும்பை அரைத்து சர்க்கரை உற்பத்தி செய்யப்பட உள்ளது.

முன்னதாக கடந்த மாதம் 31-ஆம் தேதி ஆலையில் உள்ள கொதிகலன்கள் இளஞ்சூடு ஏற்றும் பணி தொடங்கப்பட்டு அரைவைக்கான முன்னோட்டப் பணிகள் நடைபெற்று வந்தன. அதனைத் தொடர்ந்து 2015-2016 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவைப் பணி தொடக்க நிகழ்ச்சி திங்கள்கிழமை காலை நடைபெற்றது.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகக் குழுத் தலைவர் கோரந்தாங்கல் எ.குமார் தலைமை வகித்தார். ஆலை மேலாண்மை இயக்குநர் சிவராசு முன்னிலை வகித்தார்.

இதில் சர்க்கரை ஆலையின் கரும்பு பெருக்கு அலுவலர் விவேகானந்தன், துணைத் தலைமைப் பொறியாளர் செங்குட்டுவன், தலைமை ரசாயனர் குணசேகர், மேலாளர் சுப்பிரமணி,நிர்வாகக் குழு துணைத் தலைவர் ரங்கநாதன், வேலூர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளர் ராமு, இயக்குநர்கள் ஆனந்தன், பஞ்சநாதன், கரும்பு விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர் கண்ணைய நாயுடு, செயலாளர் ரகுபதி, ஆலை நிர்வாகக் குழு உறுப்பினர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுமார் ரூ.120 கோடி திட்ட மதிப்பீட்டில் இணை மின்சாரம்(கோஜென்) உற்பத்திக்கான கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளன.

அடுத்த ஆண்டு கரும்பு அரைவைப் பணி தொடங்கும்போது கரும்பு கழிவில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் வகையில் முழுவீச்சில் செயல்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்போது இந்த ஆலையில் சுமார் 2.60 லட்சம் மெட்ரிக். டன் கரும்பு அரைக்க முடியும் என ஆலை நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பிப். 15-இல் அலங்கார மீன் வளர்ப்பு இலவச பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15-ஆம் தேதி நடைபெறும் அலங்கார மீன் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சியில் விருப்பமுள்ளவர்கள் பங்கேற்கலாம் என, அதன் தலைவர் என்.அகிலா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15-ஆம் தேதி திங்கள்கிழமை காலை 9 மணிக்கு அலங்கார மீன் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. இப் பயிற்சியில் நன்னீர் அலங்கார மீன்களின் வகைகள், பராமரிப்பு, இனப்பெருக்க முறைகள், அதிக லாபம் ஈட்டும் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் மீன் இன வகைகள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், விருப்பமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் வருகிற 14-ஆம் தேதிக்குள் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266650 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கான மருத்துவம்:நாளை பயிற்சி; பங்கேற்க அழைப்பு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் கால்நடைகளுக்கான

நாட்டு மருத்துவம் குறித்த பயிற்சி பெற அந்த மையம் சார்பில் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாலிகண்டபுரத்தில் உள்ள ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் புதன்கிழமை (பிப். 10) காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை கால்நடைகளுக்கான நாட்டு மருத்துவம் குறித்த பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் நாட்டுப்புறங்களில் கிடைக்கும் இயற்கை மூலிகைகளைக் கொண்டு, கால்நடைகளுக்கு ஏற்படும் மடிவீக்கம், கோமாரி உள்ளிட்ட நோய்களை குணப்படுத்தக்கூடிய நாட்டு மருத்துவம் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ள விவசாயிகள் தங்களது பெயரை 04328- 293251 என்ற எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம் என, அந்த மையம் சார்பில் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள்: ஆட்சியர் தகவல்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன் தாலுகாவிற்கு ஒன்று என்ற அளவில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்களிடம் 200 மூட்டைகளுக்கு மேல் இருக்கும்பட்சத்தில் திருவாரூரில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் தங்களது பெயர், இடம், செல்லிடப்பேசி எண் ஆகிய தகவல்களை 04366-222542 என்ற தொலைபேசி எண் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதையடுத்து முன்னுரிமை அடிப்படையில் தங்களை அணுகி நெல் மூட்டைகளின் எண்ணிக்கை, நெல்லின் தரம், சிட்டா அடங்கல்

ஆகியவற்றை சரிபார்த்த பின்பு நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## மீன்வள புள்ளியியல் தகவல் சேகரிப்பு பயிற்சி முகாம்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் மீன்வள புள்ளியியல் தகவல் சேகரிப்பு பயிற்சி முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.
தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் அங்கமான தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உலக வங்கி நிதியுதவியுடன், மாநில மீன்வளத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மீன்வளப் புள்ளியியல் சேகரிப்பு முறைகள் குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.
மீன்வளத் துறை இணை இயக்குநர் அமல்சேவியர் பயிற்சி முகாமைத் தொடங்கி வைத்து பேசியது; இந்த தகவல் சேகரிப்பு மூலம் நமது பகுதியிலுள்ள மீன்களின் தற்போதைய நிலையை அறியவும் எவ்வளவு மீன்களை நாம் அறுவடை செய்யலாம் என்பதற்கான சரியான முடிவை எடுக்க திட்டமிடுபவர்கள் மற்றும் மீன்பிடி மேலாளர்கள் போன்றோர்களுக்குத் தேவையான விவரங்களைப் பெறவும் உதவும் என்றார் அவர்.

கல்லூரி முதல்வர் கோ. சுகுமார் பேசுகையில், மீன்வளங்களை நிலையான வளங்குன்றா வகையில் மீன்களை அறுவடை செய்யத் தேவையான மீன்வள மேலாண்மைத் திட்டத்தை வகுத்திட இந்த பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும் என்றார்.

தொடர்ந்து, மீன்வளப் புள்ளியியல் விவரம் சேகரிப்பு என்ற பயிற்சிக் கையேடு வெளியிடப்பட்டது.

மீன்வள மற்றும் சூழலியல் மேலாண்மை பள்ளித் தலைவர் சீனிவாசன், மீன்வளக் கல்லூரி மீன்வள உயிரியல் துறை தலைவர் பிரான்சிஸ், பயிற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் பா. ஜவாஹர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**மதம் சார்ந்ததல்ல, மண் சார்ந்தது!**

உலகம் முழுவதும் அன்றாடம் சுமார் 600 கோடி பேர் பால் மற்றும் பால் சார்ந்த பொருள்களை உட்கொள்கிறார்கள். இதற்காக உலகம் முழுவதும் 1.5 கோடி பேர் பால் பண்ணையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் பால் உற்பத்தியானது கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அந்தளவுக்கு மனிதனின் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டது பால்.

உலகிலேயே இந்தியா பால் உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது. முதலிடத்தில் அமெரிக்காவும், மூன்றாம் இடத்தில் சீனாவும் தொடர்கின்றன.

உலகிலேயே மிக அதிகமாக, இந்தியாவில் 2003-இன் நிலவரப்படி சுமார் 28.5 கோடி மாடுகள் இருந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அவற்றில் 26 வகையான மாட்டினங்கள் அடங்கும். அதில் சாஹிவால், சிந்தி, கிர், உம்பளச்சேரி, கரன்சுவிஸ் மாட்டினங்கள் பிரசித்திப் பெற்றவை.

கிராமங்களில் இயற்கையாக மாடு மேய்க்கும்போது கருத்தரிக்கும் நிலையே காணப்பட்டது. ஆனால், இன்று இந்தியாவில் நாட்டு பசுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து, செயற்கை முறையில் பசுக்களைக் கருத்தரிக்கும் முறை அதிகரித்து வருகிறது.

பொதுவாக, கிராமங்களில் காளை மாடுகள் விவசாயம் சார்ந்த உழவு வேலைகளுக்கும், பால் வியாபாரம் செய்யும் விவசாயிகளால் இனப் பெருக்கத்துக்காகவும் வளர்க்கப்பட்டன. காளைகள் மூலம் இயற்கையான இனப் பெருக்கம் செய்வதற்கான இடங்களும் இருந்தன. இவ்வாறு இயற்கையான முறையில் இனப் பெருக்கமும், பால் சுரப்பும் நிகழ்ந்து வந்தது.

ஆனால், இப்போது அந்த நிலை முற்றிலும் மறைந்துவிட்டது. அனைத்து பால் பண்ணைகளிலும் செயற்கையான முறையில் இனப் பெருக்கமும், பசுக்களுக்கு மருந்துகள் செலுத்துவதன்மூலம் பால் சுரப்பை அதிகரிக்கும் தொழில்நுட்பமும் பெருமளவு பயன்படுத்தப்படுவதும் வெண்மைப் புரட்சிக்கு வழிவகுத்தாலும், நாம் இயற்கையிலிருந்து விலகிச் சென்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

இயற்கையாகக் கருத்தரிக்கும் முறை குறைந்து, பசுக்களுக்கு ஊசி மூலம் விந்தணுக்கள் செலுத்தப்படுகின்றன. இதனால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சேகரிக்கப்பட்ட நாட்டு மாடுகளின் விந்தணுக்கள் குறைந்து வருகின்றன.

இந்நிலையில், பால் உற்பத்தியை அதிகரிக்க வெளிநாடுகளில் இருந்து ஜெர்ஸி இன காளைகளின் விந்தணுக்கள் வாங்கப்பட்டு வருகின்றன. அவை மூலம், கலப்பின முறையில் செயற்கையாகக் கருத்தரிக்கும் முறை கையாளப்படுகிறது. இதன் மூலம் புதிய இனமும் உருவாகிறது, பண்ணைகளுக்கு அதிகப்படியான பாலும் கிடைக்கிறது.

இதுவரை சரி. ஆனால், இதற்குப் பின்னால் மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது என்பது வெளியில் கூறப்படாமல் தொடர்கிறது.

பாலின் வகைகள் ஏ1, ஏ2 என்று இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. உலகிலுள்ள அனைத்து பாலூட்டிகளும் இயற்கையாக ஏ2 வகையான பாலையே சுரக்கின்றன. மனித இனத்தின் தாய்ப்பாலும் இந்த ஏ2 வகையைச் சேர்ந்தவையே. இயற்கையாகச் சுரக்கும் இவ்வகையான பால் மனிதர்களுக்குச் சத்தானது, எளிதில் செரிக்கவும் கூடியது.

பொதுவாக, ஒரு பசு பால் சுரக்க வேண்டுமென்றால், அது கன்றை ஈன்று இருக்க வேண்டும். அந்தக் கன்றைப் பார்க்கும்போது தாய்ப் பசுவுக்கு இயக்குநீர் (ட்ர்ழ்ம்ர்ய்ங்) சுரந்து அது பாலை சுரக்கத் தூண்டும் என்பதே பொதுவானது. ஆனால், பண்ணையில் இது சாத்தியமில்லை என்கிறார்கள்.

ஆகையால், மாட்டுப் பண்ணை வைத்திருப்பவர்கள் செயற்கையாக இயக்குநீர்களை மாட்டின் உடம்பில் ஊசியின் மூலமாகச் செலுத்தி பால்

சுரக்க வைக்கின்றனர். இவ்வாறு செய்வதால் மாட்டின் பாலிலும் இந்த செயற்கை இயக்குநீர் கலந்து விடுகிறது. இதைத்தான் ஏ1 வகை பால் என்று கூறுவர்.

இது பெண்ணிய இயல்பைத் தூண்டுவதுடன், இந்த ஈஸ்ட்ரோஜென் கலந்த பாலை அருந்தும் பெண் குழந்தைகள் சிறு வயதிலேயே பூப்படைகிறார்கள்.

உலகில் பல நாடுகளில் ஏ1 வகை பாலை தடை செய்வது குறித்து ஆலோசித்து வருவதுடன், முதல் கட்ட வேலையாக ஏ2 வகை பாலை பயன்படுத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்தும் வருகிறார்கள். இந்தியாவின் நாட்டுப் பசுக்கள் பிரேசில், நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளில் பராமரிக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன.

அந்தப் பசுக்களுக்கு இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியத்துடன் பதிவு செய்கின்றனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து நாட்டு மாட்டினங்களும் இயற்கையாக கன்று ஈன்று பாலை சுரக்கின்றன. இவை பாலை குறைந்த அளவே சுரந்தாலும், அது நமது உடலுக்கு எந்தவிதத் தீங்கையும் உண்டாக்குவதில்லை என்பதுடன், உடலுக்கு ஆரோக்கியத்தை மட்டுமே கொடுக்கின்றன.

அதிகரித்துவிட்ட மக்கள்தொகைப் பெருக்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்படும் கலப்பின மாட்டு இனங்களும், இனப்பெருக்கத்துக்கு உதவாத லகான் கோழிகளும் தவிர்க்க முடியாத தேவை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளலாம்.

அதேநேரத்தில், நமது பாரம்பரிய, மண் சார்ந்த மாட்டினங்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவதும், ஆரோக்கியமான பாலும், முட்டையும் அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்கு இல்லாமல் போவதும் மிகப்பெரிய தேசிய இழப்பு.

கோசாலைகள் அமைத்துப் பசுக்களை வளர்ப்பதும், அவற்றிற்கு சமயச் சாயம் பூசுவதும், அடுத்த தலைமுறைக்கு அவை தொடர்ந்து பயன்தர வேண்டும் என்பதற்காகத்தான். நமது இந்திய இனப் பசுக்களைப்

பராமரிப்பதை இந்து மதத்துடன் இணைத்துப் பார்க்கக் கூடாது. இந்திய உணர்வுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்!

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஞாபகசக்திக்குகறிவேப்பிலை

சமையலில் தாளித்தல் வாசனையை அதிகரிக்கும் கறிவேப்பிலை பிற பொட்களின் வாசனையை உறிஞ்சும் இயல்புடையது. கருவாட்டினை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு வாகனங்களில் கொண்டு செல்லும் போது சாலை முழுவதும் நாற்றமடிக்கும். இந்த பிரச்னையை சமாளிக்ககருவாட்டுடன் கறிவேப்பிலை வைத்துக் கட்டும் முறையை தற்போது கடைபிடிக்கின்றனர். இந்த கருவேப்பிலை கருவாட்டின் வாசனையை உறிஞ்சும். குழப்பமும், கவலையுமாக தவிப்பவர்களுக்கு கறிவேப்பிலைச் சாறு மன அமைதியைத் தரும் என கண்டறியப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு ஞாபக சக்தியை துாண்டவும் கறிவேப்பிலை பரிந்துரை செய்யப்படுகிறது.

## கோடை தொடங்கும் முன்பேவிற்பனைக்கு வந்த தர்பூசணி

ஒட்டன்சத்திரம்:கோடை காலம் தொடங்கும் முன்பே, திண்டிவனம் பகுதி தர்பூசணி ஒட்டன்சத்திரத்தில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இரவில் பனி இருந்த போதிலும், பகலில் சுட்டெரிக்கும் வெயில் கோடை காலத்தை நினைவு படுத்தும் வகையில் சூட்டை கிளப்பி வருகிறது.

இதன்காரணமாக இப்போதே நீர்ச்சத்துள்ள பழவகைகள், குளிர் பானங்கள், இளநீரை தேடிச் செல்ல வேண்டி உள்ளது. அனைத்து வகை பழங்களுடன் ஒப்பிடுகையில் குளிர்ச்சியை தரும் தர்பூசணி மட்டுமே விலை குறைவாக நமக்கு கிடைக்கிறது.

நன்றாக விளைந்த பழம் ஒன்று இரண்டு கிலோவுக்கு மேல் இருக்கும். இதில் ஒரு பழம் வாங்கினாலே ஒரு குடும்பத்திற்கு போதுமானதாக இருக்கும் என்பதால் தர்பூசணி வியாபாரம் கோடை காலத்தில் அமோகமாக நடக்கும். ஆனால் இந்த வருடம் பெய்த மழை காரணமாக தர்பூசணி விளைச்சல் குறைந்துள்ளது. ஒட்டன்சத்திரம் வியாபாரி வேலுச்சாமி கூறுகையில்,"" கடந்த ஆண்டு தர்பூசணி கிலோ ரூ.15க்கு விற்றது. இந்த ஆண்டு விளைச்சல் குறைந்துள்ளதால் கிலோ ரூ.20க்கு விற்கிறது," என்றார்.

**மானாவரியாக விளையும் கேரளா செண்டு பூ**

சாணார்பட்டி;சாணார்பட்டி பகுதியில் சிந்தாமணி என அழைக்கப்படும் கேரளா செண்டு பூ வகையை விவசாயிகள் மானாவரியாக சாகுபடி செய்துள்ளனர்.

சாணார்பட்டி வட்டாரத்தில் திருமலைக்கேணி, மாமரத்துப்பட்டி, புகையிலைப்பட்டி, வலசு, வல்லம்பட்டி, கே.குரும்பபட்டி பகுதிகளில் கேரளா செண்டு பூ சாகுபடி செய்யப்படுகிறது.

இது சாதாரண செண்டு பூ போலவே நடவு செய்த இரண்டு மாதங்களில் பூக்கத் துவங்கி விடும். நன்கு பராமரித்தால் தொடர்ந்து 90 நாட்களுக்கு பலன் தரும். சாணார்பட்டி பகுதியில் நிலவும் வறட்சி காரணமாக பெரும்பாலான விவசாயிகள் மானாவரியாகவே சாகுபடி செய்துள்ளனர். தற்போது நிலவி வரும் பனியால் காற்றில் உள்ள ஈரப்பதம் செடிக்கு பூக்கும் தன்மையை கொடுக்கிறது. மேலும் இந்த கிராமங்கள் கரந்தமலை அடிவார பகுதியில் உள்ளதால் காட்டு மாடுகள் விளைநிலங்களை சேதப்படுத்துகின்றன. ஆனால் செண்டு பூ போன்ற பயிர்களை அவை விரும்புவதில்லை. இதனால் செண்டு பூ சாகுபடி செய்வதில் இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

## விவசாயிகளுக்கு பவர் டில்லர் மான்ய விலையில் வினியோகம்

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் வட்டார விவசாயிகள் வேளாண் துறை சார்பில், மான்ய விலையில், பவர் டில்லர் வழங்கப்பட்டது.

திருக்கோவிலூர் வேளாண் விரிவாக்க மையம் சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 5 விவசாயிகளுக்கு 75 ஆயிரம் ரூபாய் மான்யத்தில்

பவர் டில்லரை வேளாண் இணை இயக்குனர் ரவி வழங்கினார். திருக்கோவிலூர் வட்டார வோளண் உதவி இயக்குநர் நாராயணசாமி, வேளாண் அலுவலர்கள் சுப்ரமணியன், கவுஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர். உதவி வேளாண் அலுவலர் குமார் நன்றி கூறினார்.

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் கூட்டுறவு தொடக்க வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

கள்ளக்குறிச்சி சி.எம்.எஸ்., வளாகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு டி.ஆர்.ஓ., ராஜசேகரன் தலைமை தாங்கினார். காமராஜ் எம்.பி., அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தனர். நிலவள வங்கி தலைவர் ஜெயக்குமார் வரவேற்றார். அமைச்சர் மோகன் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கினார்.

## தொடக்க வேளாண் வங்கி கட்டட அடிக்கல் நாட்டு விழா

கூட்டுறவு இணை பதிவாளர் சந்திரசேகர், துணை பதிவாளர் சக்கரவர்த்தி, கள்ளக்குறிச்சி நகர்மன்ற சேர்மன் பாலகிருஷ்ணன், ஒன்றிய சேர்மன் ராஜசேகர், கூட்டுறவு வங்கி தலைவர் கதிர் தண்டபாணி, சி.எம்.எஸ்., தலைவர் பச்சையாப்பிள்ளை, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாபு<, நகராட்சி கமிஷனர் நக்கீரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் ரூ.74 லட்சத்துக்கு வர்த்தகம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் 74 லட்சம் ரூபாய் மதிப்பில் நேற்று வரத்து இருந்தது.

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் உளுந்து, மக்காச்சோளம், வரகு போன்ற தானியங்கள் வரத்து நேற்று அதிகமாக இருந்தது. 428 விவசாயிகள் 700 மூட்டை உளுந்து விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஒரு மூட்டை உளுந்து அதிகபட்சம் 9,540 ரூபாய்க் கும், குறைந்தபட்சம் 9,283 ரூபாய்க்கும் விலை போனது. உளுந்து 66 லட்சம் ரூபாய் மதிப்பில் உளுந்து வரத்து இருந்தது. இதேபோல் 26 விவசாயிகள் 400 மூட்டை மக்காசோளம் கொண்டு வந்தனர். மக்காச்சோளம் ஒரு மூட்டை 1,456 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 1,292 ரூபாய்க்கும் விலை போனது. இவை மொத்தம் 5 லட்சத்து 70 ஆயிரத்துக்கு விறபனையானது.

21 விவசாயிகள் 30 மூட்டை, கம்பு விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஒரு மூட்டை அதிகபட்ச விலையாக 2,323 ரூபாய்க்கும், குறைந்தபட்ச 2,293 ரூபாய்க்கும் விலை போனது. இவை மொத்தம் 70 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில், நேற்று ஒருநாள் மட்டும் 513 விவசாயிகள் கொண்டு வந்த 1,170 மூட்டை தானியங்கள், 74 லட்சத்திற்கு விலை போனது.

## நெல் அறுவடைக்கு விவசாயிகள் தயார்

சின்னமனூர்:சின்னமனூர் பகுதியில் நெல் அறுவடைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இப் பருவத்தில் 350 எக்டேர் "மிஷின்' நடவு செய்ததால் கூடுதல் வரத்திருக்கும் என விவசாயத் துறையினர் தெரிவித்தனர்.சின்னமனூர் பகுதியில் மூன்றாயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி நடக்கிறது. பாரம்பரிய நெல் நடவுடன், திருந்திய நெல் சாகுபடிக்கு விவசாயிகள் ஊக்கு விக்கப்பட்டனர். இதனால் கணிசமாக

நெல் உற்பத்தி அதிகரித்தது. நடப்பு பருவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வயல்களில் மிஷின் நடவு மேற் கொள்ளப்பட்டது. திருந்திய நெல் சாகு படியை விட இந்த முறையில் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

விவசாயி முத்துவேல் குமரன் கூறுகையில், ""கம்பம், உத்தம பாளையம் பகுதியில் பரவலாக குலை நோய் தாக்கியது. சின்னமனூர் பகுதியில் இதன் பாதிப்பில்லை. கடந்த முறை இரண்டாம் போகம் சம்பா சாகுபடியில் ஒரு மூடை ரூ. 850 க்கு மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். நடப்பு பருவத்தில் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால், கூடுதல் லாபம் கிடக்க வாயப்புள்ளது,'' என்றார்.

விவசாயத்துறையினர் கூறுகையில், "கடந்த பருவத்தில் ஒரு எக்டேருக்கு சராசரியாக 7.5 டன் முதல் 8 டன் வரை மகசூல் கிடைத்தது. நடப்பு பருவத்தில் மார்க்கையன்கோட்டை, சின்ன வாய்க்கால் பரவில் மிஷின் நடவு ஊக்கு விக்கப்பட்டது. இந்த முறையில் மகசூல் அதிகரிக்கும் என்பதால் எக்டேருக்கு 8.5 டன் நெல் வரத்திருக்கும் என எதிர் பார்த்துள்ளோம். நோய் தாக்குதல் இன்றி இந்த பருவத்தில் நெல் விளைச்சல் கண்டுள்ளதால், விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைக்கும்,' என்றனர்.

**மீன் வளர்ப்பு பயிற்சி**

நாமக்கல்: வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் அகிலா வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 15ம் தேதி, அலங்கார மீன் வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. விருப்பமுள்ளவர்கள் வரும், 14ம் தேதிக்குள், நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தை, நேரிலோ அல்லது, 04286 - 266 345, 266 650 என்ற

எண்ணிலோ தொடர்பு கொண்டு, தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உலகளவில் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

குன்னூர், : வாடிக்கையாளர்களின் தேயிலை தூள் பயன்பாடு எதிரொலியால் உலக அளவில் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. உலக அளவில் தேயிலை தொழில் இந்தாண்டு முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தாண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை தேயிலை உற்பத்தி அதிகரித்து உள்ளதுடன் அதற்கு விலையும் கூடுதலாக கிடைத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தேயிலை தூளின் பயன்பாடு அதிகரித்துள்ளது தான். கருப்பு தேயிலையை அனைத்து தரப்பினரும் விரும்பி பயன்படுத்துவதால் ஏற்றம் கண்டுள்ளது. கடந்தாண்டு இந்தியாவில் மட்டும் 9 சதவீத கருப்பு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இந்தாண்டு இதன் உற்பத்தி 15 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தாண்டு முதல் 8 மாதங்களில் கென்யா ஏல மையத்தில் 92 சதவீதம், இலங்கையில் 97 சதவீதம், இந்தோனிசியாவில் 99 சதவீதம், இந்தியாவில் 80 சதவீதம் என வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் தேயிலை தூள் விற்பனையாகி உள்ளது. இந்தியாவிலுள்ள 8 ஏல மையங்களிலும் கருப்பு தேயிலைக்கு கடும் கிராக்கி நிலவி வருகிறது. அனைத்து பகுதிகளிலும் தேயிலைக்கு சாதகமான சூழல் இருப்பதால் இந்தாண்டு இறுதியில் தேயிலை தூள் உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து அதிகம் ஒருக்கட்டு ரூ.850க்கு விற்பனை

பொள்ளாச்சி, : காந்தி மார்க்கெட்டுக்கு நேற்று வாழை இலை வரத்து வழக்கத்தைவிட அதிகமாக இருந்தது. இருப்பினும் விசேஷ நாட்கள் தொடர்ந்து வருவதால் கூடுதல் விலைக்கு ஏலம்போனது. ஒருக்கட்டு ரூ.850க்கு விற்பனை செய்யப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரத்தில் வியாழன் மற்றும் ஞாயிறு என இரண்டு நாட்களும் வாழை இலை ஏலம் நடைபெறுகிறது. சுற்று வட்டார கிராமங்கள் மட்டுமின்றி பழநி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து விவசாயிகள் இலைக்கட்டுகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இதில் கடந்த மாதம் துவக்கத்தில், பனிப்பொழிவால் மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து குறைந்ததால் ஒருக்கட்டு வாழை இலை ரூ.800வரை விலை போனது. அதன்பின் கடந்த சில வாரங்களாக விலை சரிந்து ஒருக்கட்டு ரூ.500ஆக குறைந்தது. இந்நிலையில் தற்போது பனிப்பொழிவு குறைந்த நிலையில் பல கிராமங்களில் வாழை இலை அறுவடை செய்யப்பட்டு, அதனை விவசாயிகள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக அதிகளவு கொண்டு வருவதை தொடர்ந்துள்ளனர். நேற்று தேர்நிலை மார்க்கெட்டின் ஒருபகுதியில் நடைபெற்ற ஏலநாளில் சுற்றுவட்டார பகுதியிலிருந்தும் வெளியூர்களில் இருந்தும் வாழை இலைக்கட்டு வரத்து அதிகமாக காணப்பட்டது. நேற்று வாழை இலை கட்டுகள் வழக்கத்தை விட அதிகமாக இருந்தாலும், விசேஷ தினம் அடுத்தடுத்து தொடர்ந்து இருப்பதால் கூடுதல் விலை நிர்யணம் செய்யப்பட்டு ஏலம்விடப்பட்டது. இதில், 100எண்ணம் கொண்ட ஒரு இலை கட்டு ரூ.450 முதல் ரூ.850 வரை என ஏலம்போனது. வரும் ஏலநாளில் இன்னும் வழை இலைக்கட்டின் விலை உயர வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்துவது எப்படி

சேதுபாவாசத்திரம், : உளுந்து பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார

வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: உளுந்து பயிரை தாக்கும் பூச்சிகளில் தண்டு ஈ, அசுவினி, தத்துபூச்சி, வெள்ளை ஈ ஆகியன மிக முக்கிய பூச்சிகளாகும். தண்டு ஈ தாக்குதலால் செடிகள் முற்றிலும் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் மருந்தினை விதைத்த 7ம் நாள் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வளர்ச்சி பருவத்தின் போது தாக்கும் அசுவினி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்திட மீத்தைல் டெமட்டான் (அல்லது) டைமீத்தோயேட் (அல்லது) பாஸ்போமிடான் இதில் ஏதாவது ஒரு மருந்தை 2 மிலி யை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வானிலையில் அசுவினியின் தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதற்கு டைக்குளோர்வாஸ் 2 மிலி மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய்களை பொருத்தமட்டில் மஞ்சள் தேமல் நோய், வாடல் நோய், வேர் அழுகல் நோய், சாம்பல் நோய் ஆகியன முக்கியமானவையாகும். மஞ்சள் தேமல் நொய் தென்பட்டால் உடனே பயிரை பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். வாடல்நோய் மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குண்ட செடிகளை பிடுங்கி அகற்றி அந்த இடத்தில் பாவிஸ்டின் 10 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து செடி பிடுங்கிய இடத்தில் கரைசலை ஊற்ற வேண்டும். இதனால் நோய் பரவாமல் தடுக்கலாம். சாம்பல் நோய் தென்படும் இடங்களில் 1 லிட்டர் தண்ணீரில் நனையும் கந்தகத்தூள் 10 கிராம் மருந்தை கரைத்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**மான்ய விலையில் பவர்டில்லர்**

பட்டுக்கோட்டை,: பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு பவர் டில்லர் வழங்கும் நிகழ்ச்சி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடந்தது. திருவோணம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்

ராமாமிர்தம்ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் பயனாளிகள் பின்னையூர் மேனகா, தெற்குகோட்டை சரஸ்வதி, சோழகன்கரை பழனிச்சாமி ஆகியோருக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கலா ரூ.75 ஆயிரம் மான்ய விலையிலான காம்கோ பவர்டில்லர் கருவிகளை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ராமாமிர்தம்ராஜமாணிக்கம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு உறுப்பினர் சிவராஜ், வேளாண்மை அலுவலர் முருகேசன், உதவிவிதை அலுவலர் முருகையன், மெக் ஆட்டோமொபைல் நிறுவன தொழில்நுட்ப மேலாளர் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சரவணன், அசோகன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரெத்தினம், நெடுஞ்செழியன் ஆகியோர் செய்திருந்தனர்.

**மலர், காய்கனி கண்காட்சி நிறைவு**

காரைக்கால், : காரைக்கால் மலர், காய்கனி கண்காட்சி நிறைவு பெற்றது. இதில் சிறந்த அலங்காரத்துக்கு முதல்வர் ரங்கசாமி தங்க நாணயம் வழங்கினார். காரைக்கால் நகராட்சி திடலில் மாவட்ட வேளாண்துறை சார்பில் கடந்த 5ம் தேதி 17வது மலர், காய் மற்றும் கனி கண்காட்சி துவங்கியது. கண்காட்சியில், பெங்களூரு, புனே, ஐதராபாத், ஊட்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மலர்கள், காய்கறி செடிகள், பழங்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. கண்காட்சியில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரயில், அழகிய பெண் பொம்மை, மாட்டு வண்டி, நீரோடை, வண்ணத்துப்பூச்சி, மீன் உள்ளிட்டவைகளை மக்கள் ரசித்து பார்வையிட்டனர். இதுதவிர கொய்மலர் அலங்கார செடி, தானியம் காய்கறி செடி, மருந்து மற்றும் மனமூட்டும் செடி, அழகு தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம், பழத்தோட்டம், ஒருங்கிணைந்த மீன் பண்ணை, கோழி, ஆடு வளர்ப்பு பண்ணை மாதிரிகளும் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது.

விழாவின் நிறைவு விழா நேற்று முன்தினம் இரவு நடந்தது. கண்காட்சியை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி பார்வையிட்டார். இதைதொடர்ந்து காய்கறி செடி, அலங்காரத்தை சிறப்பாக செய்த காரைக்கால் குட்ஷெப்பர்டு ஆங்கிலப்பள்ளி மாணவிகள் குழு உள்ளிட்ட இருவருக்கு தங்க நாணயம் வழங்கி முதல்வர் ரங்கசாமி பேசியதாவது: ரூ.40 லட்சம் செலவில் காரைக்கால் மக்களுக்காக இந்த மலர் காய், கனி கண்காட்சி நடத்தப்பட்டுள்ளது. பல்லாயிரம் பேர் கண்காட்சியை ரசித்து சென்றுள்ளனர். ஐ.நா.சபை 2016ம் ஆண்டை ஆரோக்கிய வாழ்வுக்கு பயறு வகை உணவு சிறந்தது என கூறி நடப்பாண்டை பயறு ஆண்டாக அறிவித்துள்ளது. இதற்கு ஏற்றார்போல் கண்காட்சியில் பலர் பயறுவகைகள் கொண்ட பல அரங்குகளை வைத்துள்ளனர். இதன்மூலம் மக்களுக்கு இயற்கை விவசாயத்தின் மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்றார். விழாவில் அமைச்சர்கள் சந்திரகாசு, சிவா, எம்எல்ஏ திருமுருகன், கலெக்டர் வல்லவன், வாரிய தலைவர்கள் கோவிந்தராஜ், உதயகுமார், கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன், துணை இயக்குனர் ராஜேந்திரன் பங்கேற்றனர்.

## நடமாடும் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் 200 மூட்டைகளுக்கு மேல் நெல் வைத்துள்ள விவசாயிகள், நடமாடும் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி கொள்ளலாம். திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் தற்போது தாலுகாவுக்கு ஒரு நடமாடும் கொள்முதல் நிலையங்கள் என 7 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. நடமாடும் கொள்முதல் நிலையங்களின் மூலம் நெல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களிடம் 200 மூட்டைகளுக்குமேல் இருக்கும்பட்சத்தில் திருவாரூர்-மன்னார்குடி சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் தங்களது பெயர்,

இடம், கைபேசி எண் ஆகிய தகவல்களை தொலைபேசி 04366-222542 மூலமாக பதிவு செய்து கொள்ளலாம். முன்னுரிமை அடிப்படையில் தங்களை அணுகி மூட்டைகளின் எண்ணிக்கை, நெல்லின் தரம் மற்றும் சிட்டா அடங்கல் ஆகியவற்றை சரிபார்க்க பின் துணை மேலாளர்கள் திருவாரூர் மற்றும் மன்னார்குடி மூலமாக தங்களது நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் தங்களது நெல்லை நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## மானியத்தில் சொட்டுநீர் விவசாயிகளுக்கு அழைப்பு

திண்டுக்கல், : ஆத்தூர் வட்டாரத்தில் சொட்டுநீர் பாசனம் மானியம் முறையில் அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் உடன் தொடர்பு கொள்ளலாம் என்று தோட்டக்கலை உதவி இயக்குநர் ஹெடிபாய் தெரிவித்துள்ளார்.தற்போது நீராதாரங்களில் நீரின் அளவு வெகுவாய் குறைந்துள்ளது. இதனால் நிலத்தடி நீரும் குறைந்து வருகிறது.

இந்நிலையில் விவசாயிகள் குறைந்த நீரை பயன்படுத்தி தொழில்நுட்ப அடிப்படையில் விவசாய பணிகளை மேற்கொள்வது சிறந்தது. இதற்கு சொட்டு நீர்ப்பாசனம் அவசியம். இதற்காக தேசிய நுண்நீர் பாசன திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன மானியம் அளிக்கப்படுகிறது.இத்திட்டத்தில் பயன்பெற ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று உதவிஇயக்குநர் ஹெடிபாய் தெரிவித்துள்ளார்.

## பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி

திண்டுக்கல், : அமகர்நாயக்கன்பட்டியில் திண்டுக்கல் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டம் சார்பில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி நடந்தது. வட்டார உதவி இயக்குநர் ராஜா வரவேற்றார். மாவட்ட துணை இயக்குநர்

பாஸ்கரன் தலைமை வகித்து வேளாண்மை துறையின் செயல்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விளக்கி பேசினார்.வட்டார வேளாண்மை அலுவலர் போது மண்வள ஆய்வு, உழவியல் பராமரிப்பு குறித்தும், வேளாண்மை அலுவலர் மானிய திட்டங்கள் குறித்தும் விளக்கினர்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராமகிருஷ்ணன் பயறு வகை சாகுபடி முறை பாரம்பரிய தொழில்நுட்பம் குறித்தும் இயற்கை முறையில் பூச்சி நோய் கட்டுப்பாடு மற்றும் உயிர் உர பயன்பாடு பற்றியும் செயல் விளக்கமளித்தனர்.அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவக்குமார், அருண்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நெற்பயிரில் பூச்சி நோய் தாக்குதல் கட்டுப்படுத்த உதவி இயக்குநர் ஆலோசனை

பழநி, : வயல்களில் பூச்சிநோய்களை ஒழிக்கும் முறை குறித்து பழநி வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி விளக்கமளித்துள்ளார்.வயல்களில் பூச்சி நோய்கள் ஏற்படாமல் இருக்க வயல் மட்டத்திலிருந்து வரப்பின் ஓரத்தில் சுமார் 3ல் 1 பங்கு உயரத்தில் தட்டைப்பயிறு விதைக்க வேண்டும். இந்த தட்டைப்பயிரில் நெற்பயிரை தாக்காத அசுவினி உற்பத்தியாகும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். பொறி வண்டுகள் நெற்பயிரை தாக்கும் பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகளை தாக்கி அவற்றை உண்டு கட்டுபடுத்தும். 1 ஹெக்டேருக்கு 3 கிலோ தட்டைப்பயிறு விதை தேவைப்படும்.

வரப்புகளை வெட்டி சுத்தம் செய்ய வேண்டும். வடிகால் வசதிகளை சரி செய்து தேவையான அளவு மட்டுமே நீர்கட்ட வேண்டும். தேவைக்கு அதிகமாக நீர் கட்டும்போது பூச்சிநோய் தாக்குதல் அதிகமாகும் என்பதால் தேவைக்கு ஏற்ப நீர்ப்பாய்ச்ச வேண்டும். 2 சதுர மீட்டருக்கு 1 குருத்து பூச்சியினுடைய முட்டைக்குவியல்

காணப்பட்டால், டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கும் முட்டை ஒட்டுண்ணிகள் 1 ஹெக்டேருக்கு 5 சிசி வீதம் விட வேண்டும்.

பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய ஊன் விழுங்கிகளான நயாட்ஸ் எனும் தட்டான் பூச்சிகளின் இளம் பருவ பூச்சிகளை வயலில் சிறுதொட்டிகள் அல்லது குட்டைகளில் தண்ணீர் தேக்கி வைப்பதன் மூலம் இனம் பெருக செய்யலாம். தட்டான் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் நேரத்தில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கக்கூடாது.புகையான் பூச்சிகளை கட்டுபடுத்தக் கூடிய மைரிட் எனும் விழுங்கிகள் இல்லாத வயல்களில் அவற்றை கொண்டு வந்து விட வேண்டும். நெல் வயல்களில் நீர் தொடர்ந்து தேங்கி நிற்கும் இடங்களில் மீன்வளர்ப்பதால் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. கூடுதல் வருமானமும் கிடைக்கிறது.

சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய பிவேரியா மற்றும் மெட்டாரைசியம் போன்ற பூஞ்சாளங்களை உபயோகிக்கலாம். விளக்கு பொறிகளை அமைக்கும் நோய்ப்பூச்சிகளை அழிக்கலாம். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் உகவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாமென பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## மானாமதுரையில் விற்பனை அதிகரிப்பு கொட்டும் பனியால் குவியும் ரோஜா செடி

மானாமதுரை, : பனி அதிக அளவு கொட்டுவதால் சீதோஷ்ணநிலை மாற்றத்தால் ஓசூரில் இருந்து ரோஜா செடிகள் வரத்து மானாமதுரைக்கு அதிகரித்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு பருவமழைக்கு பின், பனி கொட்ட துவங்கியது. இதனால் காற்றில் ஈரப்பதம் அதிகரித்து சீதோஷ்ண நிலை மாறியுள்ளதையடுத்து பூச்செடிகளின் வரத்து அதிகரித்துள்ளது. மிதமான தட்பவெட்பம் நிலவும் இம்மாதத்தில் வீடுகளில் அழகுக்காகவும், பெண்களின் கூந்தலை அலங்கரிக்கவும் பூச்செடிகள் வளர்ப்பு அதிகரித்து வருகிறது.

பெண்களை கவரும் இப்பூச்செடிகள் தர்மபுரி, ஒசூர் வட்டாரத்தில் முதிர்ந்த ரோஜா செடிகளில் இருந்து பதியன் முறையில் செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் ரோஜா கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.வழக்கமாக டிசம்பர் மாதத்தில் ஒசூர் மற்றும் பெங்களூர் பகுதியில் இருந்து மானாமதுரை வரும் ரோஜா செடிகளை வியாபாரிகள் பொதுமக்கள் கூடும் இடங்களில் விற்பனை செய்வர். இம்மாதங்கள் பனியும், மிதமான வெயிலும் சேர்ந்த காலமாக இருப்பதால் விற்பனையும் அதிக அளவு நடைபெற்று வருவது வழக்கம்.

இந்த முறை பிப்ரவரி மாதம் வரை பருவநிலை நீடிப்பதால் ரோஜா செடிகள் விற்பனையில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் சீசன் முடிந்த பின்னரும் விற்பனைக்காக ரோஜா செடிகளை கொண்டு வந்துள்ளனர்.மானாமதுரை கீழ்கரையில் உள்ள கோர்ட் முன்புள்ள காலி இடத்தில் செடிகள் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. ஓசூரிலிருந்து கொண்டு வரப்பட்ட சாதா ரோஸ், ஊட்டி ரோஸ், பட்டன் ரோஸ் என சிவப்பு, மஞ்சள், வெள்ளை, இளம்சிவப்பு உள்ளிட்ட 15 வண்ணங்களில் ரோஜா செடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதுதவிர ஜெர்பரா, டேலியா, ஆஸ்லேன், வெளிநாட்டு பூச்செடிகளும், உள்நாட்டில் பிரபலமான மல்லிகை, முல்லை, சாமந்தி, அரளி, செம்பருத்தி, ஜாதிமல்லி உள்ளிட்ட உள்ளிட்ட பல்வேறு வகையான பூச்செடிகளும் விற்கப்படுகின்றன.

சிறுமிகளும், இளம்பெண்களும் காலையில் இருந்தே கூட்டம் கூட்டமாகாக வந்து வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து விற்பனையாளர் லெட்சுமணன் கூறுகையில்,”மானாமதுரை பகுதியில் அதிக அளவு ரோஜா விற்பனை ஏற்கனவே நடைபெற்றுள்ளது. ஓசூர் அருகே மாரண்டஹள்ளியில் இருந்து ரோஜா செடிகள், பூச்செடிகள் விற்பனை செய்யவந்துள்ளோம்.

கடந்த சில நாட்களாக மிதமான வெயிலும் பனியுமாக இருப்பதால் இந்த முறை அதிகளவு ரோஜா செடிகளை விற்பனைக்காக வந்துள்ளோம். ஒரு செடியின் விலை ரூ.35 முதல் ரூ.50 வரையில் விற்பனை செய்கிறோம். வெளிநாட்டு செடிகளான டேலியா, ஜெர்பரா உள்ளிட்டவை ரூ. 90க்கும்,

ஒரு வயதுடைய தாய் ரோஜா செடிகளை ரூ.150 க்கும் விற்கிறோம்" என்றார்.

## சொட்டுநீர் பாசனத்தில் அதிக மகசூல் அள்ளலாம்

திருச்சுழி, : சொட்டு நீர் பாசனத்தில் நீர் விரயமாவதை தவிர்த்து அதிக மகசூல் அள்ளலாம் என பயிற்சி முகாமில் வேளாண் பொறியியல் துறையினர் தெரிவித்தனர். திருச்சுழி அருகே உள்ள எம்.ரெட்டியபட்டி, பரளச்சி கிராமத்தில் விவசாயி ராஜசேகர் என்பவர் தோட்டத்தில் நுண்ணீர் பாசன அமைப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து பயிற்சி நடைபெற்று. விருதுநகர் வேளாண் பொறியியல் துறை அலுவலகம் உதவி பொறியாளர்கள் அழகர்சாமி, மதிவாணன் மற்றும் ஜெயின் கம்பெனி பி.லிட்., மேலாளர் ராஜபாண்டி ஆகியோர் 40 முன்னோடி விவசாயிகளுக்குபயிற்சிவழங்கப்பட்டது.

முகாமில் வேளாண்மை அதிகாரிகள் கூறியதாவது: ''வேளாண்மைக்கு அடிப்படை காரணிகளா நிலம், நீர் மிக முக்கியமானது. பரந்து விரிந்து கிடக்கும் நிலப்பரப்பில் நீர் தேவையான அளவிற்கு கிடைப்பதில்லை. மழையின் அளவும் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது நீர்பாசன முறையில் சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் முறைகள் மிகவும் இன்றியமையாததாகி விட்டது. வேளாண், காய்கறி, மரப்பயிர்கள் போன்றவைக்கு சொட்டுநீர் பாசனம் முறையில் சாகுபடி செய்யலாம்.

சொட்டுநீர் பாசன முறையில் வேர் பகுதியில் தண்ணீர் உரிய அளவு தரப்படுவதால் நீர் விரயம் தடுக்கப்படுகிறது. உரிய அளவு நீர் மற்றும் கரையும் உரம் போன்றவை வழங்கும் போது களைகள், நோய்கள் பரவுதல் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் 50 சதவீதம் மகசூல் அதிகரிக்கிறது. மண் அரிமானத்தையும் தடுத்து எல்லா பருவகாலத்திலும் நீர்பாய்ச்ச முடியும். குறைந்த கால அளவு மின்சாரம் போதுமானது. ஒரு பங்கு பாசன நீரைக் கொண்டு மூன்று பங்கு பாசன பரப்பாக அதிகமாக்கலாம். இதனால் விவசாயிகளுக்கு உற்பத்தி, வருமானம்

அதிகமாகிறது''இவ்வாறுதெரிவித்தனர்.

தொடர்ந்து சொட்டுநீர் பாசன அமைப்பின் உபகரணங்கள் வடிப்பான், உரமிடும் கருவி, உரத்தொட்டி, உரம் செலுத்தும் பம்பு, பிரதானக் குழாய், பக்கவாட்டு குழாய்கள், கண்ட்ரோல் பம்பு போன்றவைகளை பராமரிப்பு மற்றும் பாதுகாத்தல் பற்றி ஜெயின் கம்பெனி மேலாளர் ராஜபாண்டி செயல்முறை விளக்கமளித்தார். சொட்டுநீர் பாசனம் பக்கவாட்டு குழாய்களில் கால்சியம் படர்ந்து அடைப்பதை தவிர்க்க ஆறு மாதத்திற்கு ஒரு முறை அமில நேர்த்தி 1 லிட்டர் ஹைட்ரோகுளோரிக் அமிலம் 3.0 லிட்டர் நீரில் கலந்து பயன்படுத்தினால் அடைப்பான்களை சுத்தம் செய்து சீராக பாசனம் அனைத்துப் பயிர்களுக்கும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் தங்களது நிலங்களில் சொட்டுநீர் பாசனம் அமைத்து பயன்பெறவும் நீரின் சிக்கனத்தை பின்பற்றி கூடுதல் ஏரியா பாசனம் செய்யவும் நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உறுதுணையாக இருக்கவும் தெரிவிக்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை விரிவாக்க திட்ட பணியாளர்கள் முத்துக்கருப்பன், வீரபாண்டி செய்திருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

# தோட்ட தொழிலாளர்களுக்கு தினக்கூலி ரூ.500 வழங்கக்கோரி சி.ஐ.டி.யூ.நடைபயணம்




பந்தலூர்,

தோட்ட தொழிலாளர்களுக்கு தினக்கூலி ரூ.500 வழங்கக்கோரி சி.ஐ.டி.யூ. சார்பில் நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.

<u>தினக்கூலி ரூ.500 வழங்க கோரிக்கை</u>

தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு தினக்கூலி ரூ.500 வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,500 ஓய்வூதியம் வழங்க வேண்டும். 10 சென்ட் இலவச நிலம், வீடு வழங்க வேண்டும். மிகவும் பழுதடைந்து கிடக்கும் டேன்டீ குடியிருப்புகளை சீரமைக்க வேண்டும்.

வனவிலங்குகள் தாக்கி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும். மேலும் அக்குடும்பத்தில் உள்ள நபர் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பந்தலூர் தாலுகா நாயக்கன் சோலை,

சேரம்பாடி, சோலாடி, அரசு தேயிலை தோட்டம், உப்பட்டி, அத்திக்குன்னு உள்பட 15 இடங்களில் சி.ஐ.டி.யூ. சார்பில் நேற்று நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது.

<u>நடைபயணம்</u>

நடைபயணத்துக்கு மாவட்ட தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மாறன், மணிகண்டன், ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், ராஜாமணி, சம்சுதீன், சீனி, ரஷீது, ஜெயக்குமார் உள்பட 100–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினார்கள். நாயக்கன்சோலை கிராமத்தில் தொடங்கிய நடைபயணம், சேரம்பாடி, கொளப்பள்ளி, புஞ்சைவயல் வழியாக நெல்லியாளம் டேன்டீ, உப்பட்டி, அத்திக்குன்னாவுக்கு மதியம் 2 மணிக்கு வந்தடைந்தது.

பின்னர் மாவட்ட தலைவர் ரமேஷ் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். முடிவில் நிர்வாகி மாறன் நன்றி கூறினார்.

**நெற்பயிர்களுடன் மனுகொடுக்க வந்த விவசாயிகள்**



ராமநாதபுரம் கலெக்டரிடம் மனுகொடுக்க விவசாயிகள் நெற்பயிர்களுடன்வந்தனர்.

குறைதீர்க்கும்கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் நடராஜன் தலைமையில் மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் அலிஅக்பர் முன்னிலைவகித்தார். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் குறைகள், கோரிக்கைகள் குறித்து மனுக்கள் அளித்தனர். இதில் சோழந்தூர் மற்றும் 72 கண்மாய்களின் பாசனசங்கத்தை சேர்ந்த விவசாயிகள், சோழந்தூர் பாலகிருஷ்ணன் தலைலமையில் கருகிப்போன நெற்பயிர்களுடன் வந்து மனுகொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:- சோழந்தூர் பிர்காவில் உள்ள சோழந்தூர் சீனாங்குடி, பிச்சங்குறிச்சி, கொத்தியார்கோட்டை உள்ளிட்ட 60 கிராமங்களில் பலஆயிரம் ஏக்கரில் நெல்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. கதிர் பருவத்தில் மழை இல்லாததால் அனைத்தும் கருகிவிட்டது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடன்தொகையை திருப்பி செலுத்த முடியாத நிலையில் உள்ளோம். எனவே மத்திய,மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுஉள்ளது.

வாலிநோக்கம் முஸ்லிம் ஜமாத் நிர்வாகிகள், ரகுமத்துல்லா தலைமையில் கொடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- வாலிநோக்கம் கிராமத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இங்கு இயங்கி வந்த இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவற்றை பல்வேறு காரணங்களுக்காக அருகில் உள்ள கீழச்செல்வனூர் மற்றும் சிக்கல் கிராமத்திற்கு இடமாற்றம் செய்து விட்டனர். இதனால் வாலிநோக்கத்தில் வங்கி சேவை இல்லாமல் பொதுமக்கள் அவதி அடைந்து வருகின்றனர். இங்கு வங்கி கிளை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

உத்தரவு

இந்து மக்கள் கட்சி மாவட்ட தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:- ராமநாதபுரம் லட்சுமிபுரம் ஊருணி தூர்வாரி சீரமைக்கப்பட்டபோது இந்த ஊருணி அருகே அமைந்துள்ள ஊருணியை உருவாக்கிய லட்சுமிஅம்மாள் நினைவிடத்தையும் மூடிவிட்டனர். மேலும் புனித தீர்த்தம் எடுக்க பயன்படும் படித்துறையும் மூடப்பட்டு விட்டது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது. எஸ்.டி.பி.ஐ. கட்சியை சார்ந்த அஜ்மல்சரீபு என்பவர் கொடுத்துள்ள மனுவில், ராமநாதபுரம் நகரில் சாலைகளில் நிறைந்துள்ள மண்ணை அகற்றவும், சேதமான சாலையை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக திரியும் நாய்களை பிடிக்கவேண்டும் என்று மனுவில் கூறப்பட்டு இருந்தது. இந்த மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

## நெல்லை மாவட்டத்தில் 44 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கலெக்டர் தகவல்



நெல்லை,

நெல்லை மாவட்டத்தில் 44 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படுகிறது என்று கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறிஇருப்பதாவது:–

<u>நெல் கொள்முதல் நிலையம்</u>

நெல்லை மாவட்டத்தில் உள்ள 13 தாலுகா பகுதியில் 62 ஆயிரத்து 195 எக்டேர் பரப்பளவில் பிசான நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் சாகுபடி செய்த நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்க ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் நெல்லை மாவட்டத்தில் 44 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டு உள்ளது.

தற்போது புளியரை, சங்கரன்கோவில், சிவகிரி, புளியங்குடி, கடையநல்லூர் மற்றும் திருக்குறுங்குடி ஆகிய இடங்களில் கடந்த 22.01.2016 முதல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த மாதம் நெல் அறுவடையை எதிர்பார்த்து வரும் 15–ம் தேதிக்குள் அரசின் நேரடி நெல்கொள்முதல் மையங்கள் திறக்கப்பட உள்ளது.

<u>இடங்கள்</u>

நெல்லை தாலுகாவில் குப்பக்குறிச்சி, சீதபற்பநல்லூர், பாலாமடை, மானூர், தென்கலம், கல்லூர், உக்கிரன்கோட்டை, பாளையங்கோட்டை தாலுகாவில் முன்னீர்பள்ளம், திடியூர், நடுவக்குறிச்சி, கீழப்பாட்டம், அரியகுளம், வெள்ளக்கோவில், தென்காசி தாலுகாவில் வடகரை, கீழப்புலியூர், சுந்தரபாண்டியபுரம், வீரகேரளம்புதூர் தாலுகாவில் ஊத்துமலை, ஆலங்குளம் தாலுகாவில் ஆலங்குளம் மற்றும் கீழப்பாவூர் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

அம்பாசமுத்திரம் தாலுகாவில் பாப்பாக்குடி, வடக்கு அரியநாயகிபுரம், பனையங்குறிச்சி, பள்ளக்கால் பொதுக்குடி, ஆழ்வார்குறிச்சி, சிவசைலம், ரவணசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், மேலச்செவல், நாங்குநேரி தாலுகாவில் மூன்றடைப்பு, மூலைக்கரைப்பட்டி ஆகிய இடங்களில் கொள்முதல் நிலையங்கள் 15–ந்தேதிக்குள் அமைக்கப்படும்.

வருகிற மார்ச் மாதம் முதல் வாரத்தில் அம்பாசமுத்திரம் தாலுகாவில் கோடாரங்குளம், அயன்சிங்கம்பட்டி, வெள்ளங்குளி ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையம் திறக்கப்படும்.

<u>விலை விவரம்</u>

அரசு உத்தரவுப்படி 1.10.2015 முதல் 30.9.2016 வரை சன்னரக நெல் 1 குவிண்டாலுக்கு ரூ.1,520–க்கும் சாதாரண நெல் 1 குவிண்டால் ரூ.1,460–க்கும் கொள்முதல் செய்யப்படும்.

நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு நேரடி நெல்கொள்முதல் மையங்களில் நெல் விற்பனை செய்து பயன்பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்து உள்ளார்.

## நெல்லை பசுமை பண்ணை காய்கறி கடையில் கலெக்டர் ஆய்வு



நெல்லை,

நெல்லை சந்திப்பு சூப்பர் மார்க்கெட்டில் உள்ள பசுமை பண்ணை காய்கறி நுகர்வோர் கூட்டுறவு அங்காடியில் காய்கறி விற்பனை கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கப்பட்டது. இந்த கடையில் கத்தரி,

வெண்டை, முருங்கைக்காய் உள்ளிட்ட அனைத்து காய்கறிகளும் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்த காய்கறி கடையை நேற்று கலெக்டர் மு.கருணாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அப்போது சூப்பர் மார்க்கெட் தலைவர் பல்லிக்கோட்டை செல்லத்துரை, மேலாண்மை இயக்குனர் அஜய்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கலெக்டர் மு.கருணாகரன் கூறுகையில், பசுமை பண்ணை காய்கறி கடையில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்வதால் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. பொருட்கள் தரமாகவும், சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்கிறது என்றார்.

## பூண்டி லிங்க் கால்வாயில் மீன் பிடிக்க போட்டி போடும் இளைஞர்கள் கிலோ ரூ.100–க்கு விற்பனை



ஊத்துக்கோட்டை,

பூண்டி லிங்க் கால்வாயில் கிடைக்கும் மிகவும் சுவையான ஜிலேபி, கெண்டை மீன்களை இளைஞர்கள் போட்டி போட்டு பிடித்துச் செல்கின்றனர். கிலோ ரூ.100–க்கு விற்பனையாகிறது.

பூண்டி ஏரி

பூண்டியில், சென்னைக்கு குடிநீர் வழங்கும் சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் உள்ளது. வறண்டு காணப்பட்ட இந்த நீர்த்தேக்கம், கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த வரலாறு காணாத பலத்த மழை காரணமாக முழுவதுமாக நிரம்பி தற்போது கடல் போல் காட்சி அளிக்கிறது.

பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து பேபி கால்வாய் மூலம் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்துக்கும், லிங்க் கால்வாய் மூலம் புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கும் தண்ணீர் திறந்து விடுவது வழக்கம்.

பூண்டி ஏரியின் உயரம் 35 அடியாகும். 3,231 மில்லியன் கனஅடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையில் 33.81 அடி நீர் மட்டம் பதிவானது. 2,190 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. பூண்டியில் இருந்து பேபி கால்வாயில் வினாடிக்கு 15 கனஅடி வீதமும், லிங்க் கால்வாயில் வினாடிக்கு 700 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மீன்பிடிக்க போட்டி

பூண்டி லிங்க் கால்வாயில் அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்படுவதால் சுவையான ஜிலேபி மற்றும் கெண்டை மீன்கள் தாராளமாக கிடைக்கின்றன. இவற்றை இளைஞர்கள் தூண்டில் மூலம் போட்டி போட்டு பிடித்துச் செல்கின்றனர்.

சிலர் தாங்கள் பிடித்த மீன்களை கிலோ ரூ.100–க்கு விற்பனை செய்து வருகின்றனர். அந்த மீன்கள் மிகவும் சுவையாக இருப்பதால் பொதுமக்களும் ஆர்வமாக வாங்கிச் செல்கின்றனர். இளைஞர்கள் மீன்களை தூண்டில் மூலம் பிடிப்பதை வேடிக்கை பார்க்க அங்கு பெரிய கூட்டமே கூடிவிடுகிறது.

**உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக 2,412 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் வழங்கினார்**



செய்யாறு,

செய்யாறில் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் மூலமாக ரூ.1 கோடியே 47 லட்சத்தில் 2 ஆயிரத்து 412 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியம் வழங்கினார்.

நலத்திட்டஉதவிகள்வழங்கும்நிகழ்ச்சி

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு டவுன் மார்க்கெட் பகுதியில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் தமிழக அரசின் சார்பில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலமாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் வே.ஜோதி தலைமை தாங்கினார். தாசில்தார்கள் ரெகனாபேகம், ஜி.பெருமாள் ஆகியோர்முன்னிலைவகித்தனர்.

நிகழ்ச்சியில் தமிழக தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் கலந்து கொண்டு செய்யாறு, ஆரணி, வந்தவாசி, வெம்பாக்கம், சேத்துபட்டு ஆகிய 5 தாலுகாக்களை சேர்ந்த 2 ஆயிரத்து 412 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 47 லட்சத்தில் திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளைவழங்கினார்.

அப்போதுஅவர்பேசியதாவது:-

வட்டியில்லாகடன்

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி 54 திட்டங்களையும் முழுமையாக செயல்படுத்தி வருகிறார். கிராமப்புற பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்காகவே கறவைமாடுகள், ஆடுகள் வழங்கி வருகிறார். ஏழை, எளிய பெண்களின் திருமணம் தடைபட கூடாது என்கிற உயர்ந்த நோக்கத்தில் 4 கிராம் தங்கத்துடன் திருமண உதவித்தொகை வழங்கி வருகிறார்.

பள்ளி கல்வித்துறை சார்பில் மடிக்கணினி, மிதிவண்டி உள்ளிட்ட 14 வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கி கல்விப்புரட்சி செய்துள்ளார் தமிழகமுதல்-அமைச்சர்ஜெயலலிதா.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் உழவர் பாதுகாப்புத்திட்டத்தில் 2 லட்சத்து 15 ஆயிரத்து 982 பயனாளிகளுக்கு ரூ.162 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகளுக்கு அவர் வட்டியில்லா கடனுதவி திட்டத்தை அறிவித்து ரூ.5 ஆயிரம் வரை வட்டியில்லா கடனுதவி வழங்கியுள்ளார். பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார் அவரது சிறப்பான திட்டங்களில் மூலமாக தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.


இவ்வாறுஅமைச்சர்பேசினார்.


நிகழ்ச்சியில் மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் ஏ.அருணகிரி, நகர செயலாளர் ஏ.ஜனார்த்தனம், பி.லோகநாதன், சி.துரை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பசுமைக் கட்டிடம்





பசுமைக் கட்டிடம் என்பது இயற்கையான பொருட்களை பயன்படுத்தியும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை பயன்படுத்தியும் கட்டிடம் கட்டப்படுவதாகும். மின்சாரப் பயன்பாட்டைக் குறைப்பதுதான் இதன் முக்கிய நோக்கம். மேலும் வீட்டைச் சுற்றிலும் மரம் செடி கொடிகள் அமைப்பதும் பசுமை வீடுகள் வடிவமைப்பில் உள்ளதால் ஆக்ஸிஜன் உற்பத்தியும் அதிக அளவில் நடைபெறும். இதன் மூலம் அந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு சுத்தமான காற்று கிடைக்கும்.

மரங்களை நடுவது, அதிக புகையை வெளியிடும் வாகனங்களுக்குத் தடை விதிப்பது உள்ளிட்ட பல நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கவும், பாதுகாக்கவும் உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில்தான் பசுமை வீடுகள் (GREEN BUILDING) உருவாக்கம் என்கிற கருத்து உலகம் முழுவதும் பேசப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகின்றன. பொதுவாக வீடு கட்ட வேண்டும் என்று முயற்சிப்பவர்கள் இயற்கைக்கு சாதகமான வீடாக கட்ட வேண்டும் என்று முயற்சிப்பதில்லை. காரணம் பசுமை வீடுகள் என்கிற கருத்து இன்னும் பல மக்களையும் சென்று சேரவில்லை என்பதுதான்.

அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க, இயற்கை சூழலில், பாதிப்புகளை ஏற்படுத்தாத கட்டிடம் கட்டுவதுதான் நம் அடுத்த தலைமுறைக்கு அளிக்கக்கூடிய மிகப்பெரிய கொடை. அமெரிக்கா,

இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகள் இதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. ஒரு கட்டிடத்தை கட்ட திட்டமிடும்போதே சூழலுக்கு உகந்த கட்டிடமாக கட்ட முயற்சி செய்கின்றனர். இந்தியாவிலும் இத்தகைய முயற்சிகள் வேகமாக பரவி வருகிறது.

> பசுமைக் கட்டிட முயற்சிகள் மூலம் மின்சார பயன்பாட்டையும், தண்ணீரையும் மிச்சப்படுத்த முடியும்.

> இங்கிலாந்தில் மொத்தக் கட்டுமானத்தில் 40 சதவீத கட்டிடங்கள் பசுமை கட்டிடம்.

> அமெரிக்காவில் 30% கட்டிடம் பசுமை கட்டிட அமைப்பில் இருக்கிறது.

> இந்தியாவின் மொத்தக் கட்டுமானத்தில் 3% கட்டுமானங்கள் பசுமை கட்டிடமாகும்.






**இந்தியாவின் முக்கிய பசுமைக் கட்டிடங்கள்**

**இந்திய தொழில்துறை கூட்டமைப்பு கட்டிடம், ஹைதராபாத்**



2014-ம் ஆண்டு இந்தக் கட்டிடம் திறக்கப்பட்டது. இந்தியாவிலேயே முதன் முதலில் எல்இடி பிளாட்டினம் தரச் சான்றை பெற்றது. கட்டிடத்தைச் சுற்றி காற்றாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உயிரியல் ரீதியிலான ஒரு குளமும் இந்த கட்டிடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளது. தேவையான மின்சாரம் சூரியத் தகடுகள் மூலம் பெறப்படுகிறது.

**கிரிசில் ஹவுஸ், மும்பை**



இந்தக் கட்டிடத்திற்கு உள்ளே 14 பூங்காக்கள் உள்ளன. மேலும் இந்த கட்டிடத்தின் உட்பகுதியை அமைக்க பயன்படுத்தப்பட்ட பொருட்களை மறுசுழற்சி செய்யமுடியும். 70 சதவீத ஒளி இயற்கை வெளிச்சத்தின் மூலமே பெறப்படுகிறது. இதனால் 40 சதவீதம் மின்சாரம் சேமிக்கப்படுகிறது.

**இன்ஃபோசிஸ் நிறுவனம், ஹைதராபாத்**



460 ஏக்கரில் இன்ஃபோசிஸ் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் 100 சதவீதம் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. கட்டிடத்துக்குள் குளிரூட்ட நீர் மூலம் குளிர்ச்சியடைய செய்யும் தொழில்நுட்பமான ரேடியண்ட் கூலிங் தொழில்நுட்பம் இங்கு

பயன்படுத்தப்படுகிறது. புகழ்பெற்ற ஆஸ்டன் விருது இந்தக் கட்டிடத்திற்கு கிடைத்துள்ளது.

**சுஸ்லான் ஒன் எர்த், புணே**



2,300 பேர் தங்கக்கூடிய அளவிற்கு இந்தக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் குறைந்த ஆற்றலை உடைய பொருட்களால் கட்டப்பட்டுள்ளதால் கரியமில வாயு வெளியேறுவதைத் தடுக்கிறது. 90 சதவீதம் இயற்கை வெளிச்சத்தையே பயன்படுத்துகின்றனர்.

## சூரிய ஒளி மின்சார நீர்பாசனத்தில் ஏக்கருக்கு 4,500 கிலோ நெல் உற்பத்தி- நவீன தொழில்நுட்பத்தில் விவசாயி சாதனை



விதைப்பு முதல் அறுவடை வரை நவீன தொழில்நுட்பங்களை பயன் படுத்தி, சூரிய ஒளி மின்சாரத்தில் ஏக்கருக்கு 4,500 கிலோ நெல் உற்பத்தி செய்து சாதித்துள்ளார் மதுரையைச் சேர்ந்த முன்னோடி விவசாயி. அவருக்கு கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் 'வேளாண்மை செம்மல்' விருது வழங்கி கவுரவித்துள்ளது.

நெல் சாகுபடியில் மின்தடை, தண்ணீர் பற்றாக்குறை, நோய் தாக்குதல் உள்ளிட்ட சோதனை களை கடந்து, சராசரியாக ஏக்க ருக்கு 2,000 முதல் 3,000 கிலோ மக சூல் பெறுவதே அரிதான விஷயம்.

மதுரை அருகே குலமங்கலத் தைச் சேர்ந்த விவசாயி வி. கிருஷ் ணன், விதைப்பு முதல் அறுவடை வரை நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றி, ஏக்கருக்கு சராசரியாக 4,500 கிலோ முதல் 4,800 கிலோ வரை நெல் மகசூல் செய்து சாதித்து வருகிறார்.

இவருக்கு கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 'வேளாண்மை செம்மல்' விருது வழங்கி கவுரவித்துள்ளது.

இதுகுறித்து விவசாயி கிருஷ் ணன் 'தி இந்து'விடம் கூறியதாவது:

25-வது வயதில் ஆரம்பித்து 35 ஆண்டுகளாக விவசாயம் செய் கிறேன். 2011-ம் ஆண்டு, மதுரை மாவட்ட அளவில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் 'முன் னோடி விவசாயி' விருதை ஆட்சி யர் உ. சகாயத்திடம் பெற்றேன். இந்த விருதுதான் என்னை சாதிக்க தூண்டியது. 2012-ல் மத்திய வேளாண்மைத் துறை அமைச்ச கம், தேசிய அளவில் 5 ஏக்கர் வரை வைத்திருக்கும் விவசாயி கள், 5 முதல் 20 ஏக்கர் வைத்தி ருப்போர், 20 ஏக்கருக்கு மேல் வைத் திருப்போர் என தனித்தனியாக பயிர் விளைச்சல் போட்டியை நடத்தியது. அதில் ஒவ்வொரு பிரிவிலும், அதிகபட்ச நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு, பதக்கம் வழங்கப்பட்டது. 5 ஏக்கர் பிரிவுக்கான போட்டியில் ஏக்க ருக்கு 4,800 கிலோ நெல் அறுவடை செய்து சாதித்த எனக்கு, அப் போதைய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத்பவார், 'சாம்ராட் சமிருதி அக்ரி' விருதுடன் ஒரு லட் சத்து 11 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கினார்.

2013- ல் தமிழக அளவில் நடந்த பயிர் விளைச்சல் போட்டியில் 2-ம் பரிசு பெற்றேன். 2015-ம் ஆண்டில் சிறந்த உழவர் ஊக்குவிப்பாளர் விருதை தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ண மூர்த்தியிடம் பெற்றேன்.

கடந்த மாதம் 8-ம் தேதி, கோவையில் நடந்த நிகழ்ச்சியில் விதைப்பு முதல் அறுவடை வரை நவீன தொழில்நுட்பங்களை பயன் படுத்தி, சூரிய ஒளி மின்சாரத்தில் தொடர்ந்து 5 ஆண்டுகள் திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு சரா சரியாக 4,500 கிலோ நெல் அறு வடை செய்ததற்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 'வேளாண்மை செம்மல்' விருது வழங்கியுள்ளது. நவீன தொழில் நுட்பங்களை நான் பின்பற்றிய தோடு, மற்ற விவசாயிகளையும் பின்பற்ற வைத்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது என் றார்.

**ஆண்டுக்கு ரூ. 3.60 லட்சம் வருவாய்**

கிருஷ்ணன் மேலும் கூறுகையில், ''ஆரம்பத்தில் ஆயில் மோட்டார் மூலம் தண்ணீர் பாசனம் செய்தேன். தற்போது சூரிய ஒளி மின்சாரம் மூலம் சாகுபடி செய்வதால் மூன்று போக சாகுபடி செய்கிறேன். ஆற்றில் தண்ணீர் இல்லை. மழையில்லை என்ற கவலை இல்லை. நெல் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.12 ஆயிரம் வீதம் 5 ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் செலவாகிறது.

ரூ.1.80 லட்சம் வருமானம் கிடைக்கிறது. செலவு ரூ. 60 ஆயிரம் போக ஒருபோகத்துக்கு ரூ. 1.20 லட்சம் லாபம் கிடைக்கிறது. மூன்று போகம் சேர்த்தால் ஆண்டுக்கு ரூ. 3.60 லட்சம் கிடைக்கிறது. களை எடுக்க மட்டுமே ஆட்களை பயன்படுத்துவேன். நானே உரம் இட்டு, தண்ணீர் பாசனம் செய்கிறேன். அதனால், கூலியாட்கள் செலவும் மிச்சம். விவசாயத்தை தொழிலாக நினைக்காமல் விரும்பி செய்தால் லாபம் கிடைக்கும்'' என்றார். விவசாயி வி. கிருஷ்ணன்